**பேருவளை பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜேசீபீ இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் மற்றும் டயர் என்பவற்றுக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட ரூபா 242,600 தொகை அந்த ஆண்டுகளின் செலவினங்களில் உள்ளடக்கப்படாமல் முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி (VAT) அறவிடப்படாத 16 வேலைகளில் பெறுமதிசேர் வரி சேகரிக்கப்பட்டு சிட்டையிடப்பட்டமையால் மூலதனச் செலவினம் ரூபா 1,629,012 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 25 கூட்டுப் பசளை பாத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 31,875 தொகை மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையில் வீதிச் செப்பனிடுகைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 118,852 தொகை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமல் வேலைக் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரியதாக புகையிரத் திணைக்களத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 90,101 நிலுவை ஆதன வரி மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

உரித்தை உறுதிப்படுத்துவதற்கான உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை மற்றும் மெய்மையாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 170,285,768 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1999 ஆம் இலக்க வர்த்தமானி | 128,460 | 2017 ஆம் ஆண்டிற்குரிய விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான நிபந்தனையின் பிரகாரம், பிரதேச சபை எல்லையில் பொருத்தப்பட்டுள்ள 49 விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 93,780 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 1647(அ) | - | வாகனத்தின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மற்றும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து இன்னுமொரு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது வாகன மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆதன வரிக்கு உட்படுகின்ற ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,699,159 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,319,213 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,266,375 | 17,403,708 | 18,873,253 | 12,902,511 | 15,964,500 | 16,188,202 | 19,172,154 | 13,529,956 |
| வாடகை | 25,834,430 | 15,282,815 | 15,682,994 | 3,139,393 | 23,166,605 | 20,428,168 | 18,116,553 | 3,549,573 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,400,630 | 4,263,287 | 4,273,287 | 10,000 | 3,240,360 | 3,372,933 | 3,352,932 | 20,000 |
| ஏனைய வருமானம் | 53,992,495 | 44,000,000 | 46,506,665 | 79,622,624 | 68,897,000 | 56,950,000 | 36,059,505 | 82,339,164 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 99,438,693 ஆக இருந்ததுடன், ஆண்டிற்குரிய சிட்டையிடல் ரூபா 80,949,810 ஆகும். ஆண்டின் பெறுவனவுகள் பதிவழித்தல் மற்றும் சீராக்கங்கள் ரூபா 84,713,975 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 95,674,528 ஆகும்.

#### 2.2.3 வீதவரியும் வரியும்

**ஆதன வரி**

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 12,626,630 தொகையான ஆதனவரி நிலுவை காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 6,222,705 தொகை அதாவது 49 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி சிட்டையிடல் ரூபா 13,751,331 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 8,858,172 தொகை அதாவது 64 சதவீதமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலுள்ள ஆதனவரி மீதியில் ஆண்டின் இறுதியில் மேலும், அறவிட வேண்டிய நிலுவை ரூபா 6,403,925 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்கள் வரையான நிலுவை ரூபா 2,133,581 தொகை, 03 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 3,964,559 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 1,543,760 ஆகக் காணப்பட்டது. நீண்ட காலமாக காணப்படுகின்ற ஆதனவரி தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

--------------

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை கடை வாடகை காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,081,150 நிலுவைக் கடை வாடகை மீதியில் 01 வருடத்தைக் குறைந்த 98 அலகுகளில் இருந்து ரூபா 1,002,950 தொகை, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே 23 அலகுகளிலிருந்து ரூபா 695,700 தொகையும், 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே 17 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,382,500 தொகையும் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த ரூபா 2,910,700 தொகையில் ரூபா 666,000 தொகை அதாவது 23 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

----------------------------------------------

**வியாபார வரி**

-----------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 896,325 தொகையில் ரூபா 552,600 தொகை அதாவது 62 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.6 ஏனைய வருமானம்**

--------------------------------

**சுற்றுலா அபிவிருத்தி வரித்தொகை**

------------------------------------------------------------

(i) 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்துள்ள 08 ஹோட்டல்களின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதம் வரையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) லலுனா ஹோட்டலில் 2015 ஆம் ஆண்டிற்காக குறைத்து அறவிடப்பட்ட ரூபா 91,635 தொகை மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக குறைத்து அறவிடப்பட்ட ரூபா 113,190 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காளர் நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்குகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் சிற்றுண்டிச்சாலை தரைமாடி வருமானத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 27,200,505 ஆகவும், ரூபா 52,422,119 ஆகவும்

காணப்பட்டன. எனினும், நீதிமன்றத் தண்டப்பண மீதியில் ரூபா 15,000,000 தொகை அளவில் மிகை மதிப்பீடு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 10 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிஏற்பாடு வழங்கப்படாமை**

தயாரிக்கப்பட்டுள்ள வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிலைவேற்ற வேண்டியிருந்த இலக்குகளுக்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 37,484,805 தொகையான செலவினமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உபவிதியொன்று விதிக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுப்பொருட்களை அகற்றுகின்ற பிரதேசத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் பெறப்படாதிருந்ததுடன் கழிவுப் பொருட்களை பிரதேச சபையில் காணப்படுகின்ற 02 தொழிற்சாலைகளில் இருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 11 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) கடைகளை நிர்மாணிக்கும்போது சந்தை தொடர்பான அனுபவமின்றி திட்டமிட்டமையின் காரணமாக தர்கா நகரத்தில் 09 பொதுச் சந்தை கடைகளை வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது.

(ஆ) காணிகளை கூறிட்டு விற்பனை செய்யும்போது பொது வசதிகளுக்காக பொருத்தமற்ற மிகவும் சரிவுடன் கூடிய காணி வழங்கப்பட்டிருந்தது.

(இ) காணி ஏல விற்பனையின் போது பொது வசதிகளுக்காக கிடைத்த காணி எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஈ) அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியில் 2013 ஆம் ஆண்டின் போது அளுத்கம வாராந்த சந்தை காணப்படுகின்ற இடத்தில் கடைகள் உடைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. நவீனமயப்படுத்தப்பட்ட 38 கடைகளில் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் 05 கடைகள் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தது. இந்த சகல கடைகளிலிருந்தும் வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் கடைகளை மிகவும் பயனுள்ள வகையில் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(உ) தர்கா நகரில் பொதுச் சந்தையின் மேல்மாடியின் கொங்கிறீட் தட்டு (Slab) வலுவானதாகக் காணப்படவில்லை.

(ஊ) தண்ணீர் பவுசர்களின் பொறுப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றி தண்ணீர் பவுசர் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(எ) பேருவளை பிரதேச சபைக்குச் சொந்தமான காலி வீதி இல. 290 என்ற கட்டிடத்தின் வாடகைக் காலம் 2016 திசெம்பர் 01 ஆந் திகதியில் முடிவடைந்தமையினால் மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்காக செய்திப் பத்திரிகை அறிவித்தலின் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் மாதாந்த வாடகை ரூபா 60,000 வீதம் செலுத்தி வாடகையைப் பெற்றுக்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதும், முன்னைய வாடகையாளர் 2018 பெப்ரவரி வரையிலும் கட்டிடத்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக 2018 பெப்ரவரி வரையிலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

(i) செயலாளர் பதவியின் வேலை மேவுகைக்காக முகாமைத்துவ உதவியாளர் தரம் I இன் பெண் உத்தியோகத்தர்கள் ஒருவர் அறிவிக்கப்பட்டிருந்தார்.

(ii) இரண்டாம் நிலையில் 06 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்பட்டதுடன் 03 பேர் மிகையாகக் காணப்பட்டனர்.

(iii) ஆரம்ப நிலையில் 04 உத்தியோகத்தர்களில் வெற்றிடம் காணப்பட்டதுடன் 36 பேர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.

(iv) அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் கீழ் நிரந்தரமாக்கப்பட்ட 43 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அமைய, தற்காலிக, ஒப்பந்த ஊழியர்களில் 27 பேர்களின் மிகை காணப்பட்டது.

**(ஆ) வெளியில் செல்வதற்கான அங்கீகாரம் பெறப்படாமை**

-----------------------------------------------------------------------------------------------

பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இருந்து ஊழியர்கள் வெளியே செல்வதற்கான பதிவேட்டில் குறிப்பிடப்படாமலும் மற்றும் முன் அங்கீகாரம் இன்றியும் வெளியே சென்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

-----------------------------------------------------------

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக பேருவளை பிரதேச செயலகப் பிரிவிற்குரிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் சில அரச நிறுவனங்களில் பாத்திரங்களுடன் கன்றுகள் நடுதல் தொடர்பாக தெளிவுபடுத்தி மரக் கன்றுகளை வழங்குவதற்காக ரூபா 499,995 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிராமிய மட்டத்தில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும் பேருவரை பிரதேச செயலகப் பிரிவின் மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவதற்காக ரூபா 500,000 தொகை பாதாகொட கமநல சேவைகள் செயற்குழுவிற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சாரப் பிரிவின் நடவடிக்கைகள் முறையான பிரகாரம் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 14 கடைகளையுடைய கல்கந்தவில கடைத்தொகுதி 2015 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 01, 02, 08, 09, 10 ஆம் இலக்க கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதற்காக வாடகை அறவிடலும் இடம்பெறாதிருந்ததுடன் 09 ஆம் இலக்க கடை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 03 நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிபத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்ற 32 நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

--------------------------------------------------------------------------------------

சபைக் காணிகளின் உரித்து சபைக்கு சொந்தமானது என பெயர்ப்பலகை பொருத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

----------------------------------------------------

கல்கந்தவில கடைத்தொகுதி பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

--------------------------------------------------------------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான அளுத்கம பொதுச் சந்தை தொகுதியின் 26 கடைகள் 15 வருடங்கள் அளவிலான காலமாக வாடகைக்கு வழங்கப்படாமல் காணப்பட்டன.

(ஆ) அளுத்கம உப அலுவலகத்திற்குச் சொந்தமான ஒரு தண்ணீர் பவுசர் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5.4 இருப்புப் பற்றாக்குறை

அளுத்கம உப அலுவலகத்தின் பொருட் பதிவேட்டின் பிரகாரம் 1000 லீற்றர் தண்ணீர் தாங்கிகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி 2017 ஆம் ஆண்டின் பெறுவனவுகளையும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மீதிகளையும் ஒப்பீடு செய்த போது 11 தண்ணீர் தாங்கிகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்டது.

### 3.5.5 வாகனப் பயன்பாடு

(அ) 03 வாகனங்களுக்காக ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 உடைந்த வாகனங்களை அகற்றுவதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கை உழவு இயந்திரம் பயாகல உப அலுவலகத்தில் காணப்பட்ட போது தொலைந்து போயிருந்ததுடன் காணாமல் போன காலப்பகுதியை கண்டறிய முடியாதிருந்தது. 2010 யூன் 15 ஆந் திகதிய சபை அறிக்கையின் பிரகாரம் 2010 ஏப்ரல் காப்புறுதி தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 874,332 தொகையான பேருவளை பாதாகொட சமகி மாவத்த அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட சங்கமல்லாத ஒப்பந்தகார நிறுவனமொன்றால் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் இந்த நிறுவனத்தை தெரிவு செய்யும் போது திறந்த கூறுவிலை கோரி போட்டியாளர் விலையின் கீழ் சபைக்கு நலனைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் 07 சதவீதம் முதல் 41488 சதவீதம் வரையும், செலவினங்கள் 07 சதவீதம் முதல் 260 சதவீதம் வரையுமான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | | கணக்குகளிலிருந்து கைவிடல், குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டிருந்தமை. |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | சொத்துக்களின் பாதுகாப்பிற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | (ii) | சொத்துக்கள் உரியவாறு இனங்காணப்படாமை |
| | (iii) | சொத்துக்கள் உரியவாறு பயன்படுத்தப்படாமை |
| (இ) இருப்புக்கள் | (i) | பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்படாமை |
| | (ii) | முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| (ஈ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வரி அறவிடல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) | வரி மதிப்பீடு குறித்த காலத்தில் மேற்கொள்ளப்படாமை |
| (உ) ஊழியர் முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் முறைப்படுத்தப்படாமை |
| | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை. |
| | (ii) | வருமான மதிப்பீட்டிற்கு பொருத்தமானதாக இன்மை. |